கழக வெளியீடு, ககநஉ.

அயல்நாட்டுக் கதைகள்

[மூன்றும் புத்தகம்]

ஆசிரியர் :

N K வேலன்

©

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி - 6. சென்னை - 1.
1963

என். குழந்தைவேலன் (1907)

1963 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED

Ed 1 July 1963

P31,J9(5)
w3K3·3

AYAL NATTUK KATHAIKAL - III

Appar Achakam, Madras - 1.

பதிப்புரை

அயல்நாட்டுக் கதைகள் என்னும் கழகச் சிறுகதை வரிசையில் இது மூன்றும் புத்தகமாகும். இளைஞர்க்கேற்ற இனிய கதைகள் பலவற்றை எழுதியுதவிய திரு. என். கே. வேலன் அவர்களே இச் சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

கழகவழி வெளிவந்துள்ள பிற கதை நூல்களைப் போலவே இதனையும் ஆசிரியர்களும் பெற்ரோர்களும் வாங்கிச் சிறுவர்கள் படித்து மகிழுமாறு செய்வார்களென நம்புகிரோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

பக்கம்

1.	நல்ல பையன்	1
2.	நரியும் வாத்துக்களும்	12
3.	ஓடும் தோசை	19
4.	காட்டில் கட்டிய வீடு	25



நல்ல பையன்

கோடைகாலம் வந்தது. வானத்தில் மேகமே தெரியவில்லை. வெயில் நெருப்புப்போல் காய்ந்தது.

இன்னும் உச்சிப் பொழுது ஆகவில்லை. மாடுமேய்க்கும் பையன் குடிசையைவிட்டு வெளியேவந்தான். அவன் கிழிந்த ஆடைகளை அணிந்திருந்தான். காலில் செருப்புக்கூட கிடையாது. பசு மாடுகளை ஓட்டிக்கொண்டு போனான். மாடுகளின் கழுத்தில் கட்டியிருந்த மணிகள் இனிய ஓசைகள் உண்டாக்கின.

பாலன் ஒரு குடியானவனிடம் வேலை பார்த்து வந்தான். அவன் மாடுகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவைகள் எப்பொழுதும்போல் மேய்ந்து கொண்டிருந்தன. பாலன் பசியின் கொடுமையால் வருந்தினான்.

குடியானவன் மனைவி பொல்லாதவள். பாலனுக்குக் கஞ்சிகூட ஊற்றாமல் மாடுமேய்க்க அனுப்பிவிட்டாள். பாவம், அவன் என்ன செய்வான்? இலந்தைப் பழங்களைப் பொறுக்கித் தின்றான்.

மாடுகளைக் காட்டுப்பாதை வழியாக மலைமேல் ஓட்டிச் சென்றான். பசும் புல் நிறைந்த இடத்திற்கு வந்துசேர்ந்தான். மாடுகள் அங்கே நின்றுவிட்டன. பாலன் தரையில் படுத்தான். பசி மயக்கத்தோடு இருந்தான். ஏதேனும் கிடைக்குமா என்று சுற்றிலும் பார்த்தான். புல் தரையில் இரண்டு கண்ணாடிச் செருப்புகள் மறைந்துகிடந்தன. அவைகள் மிகவும் அழகாகவும் பளபளப்பாகவும் இருந்தன.

பாலன் அவைகளை எடுத்துக்கொண்டான். அணிந்துகொண்டான். செருப்பு அவன் காலுக்குச் சரியான அளவாக இருந்தது. காலில் செருப்புகளை அணிந்தவுடன் அவன் பசியும் பறந்துபோய் விட்டது. அவன் ஆடினான், பாடினான். கைகொட்டி நகைத்தான்; ஆனந்தம் அடைந்தான்.

பொழுது சாயும் நேரத்தில் ஒரு பையன் வந்தான். அவன் அழுது கொண்டே வந்தான்.

'தம்பி ஏன் அழுகிறாய்? வா, என்னோடு விளையாடலாம்' என்று அவனை அழைத்தான்.

பையன் மீண்டும் அழத்தொடங்கினான். 'என் கண்ணாடிச் செருப்புகளைக் காணவில்லை. அவைகளை எங்கேனும் பார்த்தாயா?' என்று கேட்டான்.

பாலன் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். அவன் காலில் இருந்த செருப்புகள் புல்லில் மறைந்திருந்தன. பாலனுக்குச் செருப்புகளைக் கொடுப்ப

க்கு விருப்பம் இல்லை. ஆயினும் உண்மையைச் சொல்லிவிட்டான்.

'உன் செருப்புகள் இதோ, என்னிடம் இருக்கின்றன', என்று காண்பித்தான். அழுத பையன் சிரித்தான். செருப்புகளை வாங்கிக் காலில் அணிந்து கொண்டு ஓட்டம் பிடித்தான்.

செருப்பை இழந்த பிறகு பாலனுக்கு மீண்டும் பசி மயக்கம் வந்துவிட்டது. அவனால் நடக்க முடியவில்லை. தள்ளாடிக்கொண்டு மாடுகளுடன் வீடு திரும்பினான்.

குடியானவன் மனைவி பாலனுக்குக் கொஞ்சம் கஞ்சி ஊற்றினாள். அவன் அதைக் குடித்துவிட்டு மாடுகள் கட்டி இருக்கும் இடத்தில் படுத்துக்கொண்டான். கண்ணாடிச் செருப்புகள் கிடைத்துவிட்டதாகக் கனவு கண்டான்; 'கெக்கெக்' என்று சிரித்தான்.

மறுநாள் காலையில் வழக்கம்போல் மாடுகளை மேய்க்கச் சென்றான். வயிற்றுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. பசும் புல் தரையில் சாய்ந்தான்.

தலையை உயர்த்திப் பார்த்தான். கண்ணாடிச் செருப்புக் கிடைக்குமா என்று தேடினான். செருப்பு ஒன்றும் இல்லை. ஆனால் செருப்பு கிடைத்த இடத்தில் ஒரு சிவப்புக் குல்லாய் கிடந்தது. அதன் ஓரத்தில் சிறிய சலங்கைகள் கட்டப்பட்டிருந்தன.

பாலன் அதை எடுத்துத் தலையில் போட்டுக்கொண்டான். உடனே அவனுடைய பசி பறந்துவிட்டது. அவனுக்கு ஆனந்தம் பொங்கிற்று. குல்லாவை அணிந்துகொண்டு கூத்தாடினான். பொழுது போனதே தெரியவில்லை. 'குல்லாவை யாருக்கும் கொடுக்க மாட்டேன்' என்று சொல்லிக்கொண்டு தலையை அசைத்தான். குல்லாயிலிருந்த சலங்கைகள் ஒலித்தன.

அங்கே ஓர் அழகிய பெண் பட்டுப் பூச்சியைப்போல் பறந்து வந்தாள். அங்கும் இங்கும் பறந்து சென்று புதர்களில் எதையோ தேடினாள்.

அவள் பாலனிடம் ஓடிவந்தாள். 'தம்பி! நீ போட்டிருப்பது என் குல்

லாயா' காலையில் வந்தபோது கீழே விழுந்துவிட்டது,' என்றாள்.

பாலனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. 'கொடுக்க முடியாது போ', என்றான்.

அந்தப் பெண்ணின் கண்களி லிருந்து இரண்டு கண்ணீர்த் துளிகள் பெருகின.

'தயவு செய்து என் குல்லாயைக் கொடுத்துவிடு; அதைப் போட்டுக்கொள் ளாமல் வீட்டிற்குப் போகமுடியாது', என்று கெஞ்சினாள்.

பாலன் பேசாமல் குல்லாயை எடுத் துக் கொடுத்துவிட்டான். அவள் சிரித் துக்கொண்டே குல்லாயை அணிந்து கொண்டாள். 'போய்வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் பறந்து சென்றாள்.

பாலன் வருத்தத்துடன் வீடு திரும் பினான். மாடுகளுடன் படுத்து உறங் கினான். அரைவயிற்றுக் கஞ்சிதான் கிடைத்தது.

மறுநாள் காலையில் மாடுமேய்க்கப் புறப்பட்டான். சாப்பிடுவதற்கு ஒன்

றும் கிடைக்கவில்லை. மலைமேல் ஏறினான். மாடுகள் மேயச்சென்றன. புல் தரையில் மறுபடியும் ஏதாவது கிடைக்குமா என்று தேடிப்பார்த்தான். ஒன்றும் கிடைக்கவில்லை. 'எப்பொழுது நல்ல காலம் வரும்?' என்று ஏங்கினான்.

ஒரு புதருக்கு அடியில் ஏதோ பளிச்சென்று மின்னிற்று. அதன் அருகில் சென்று பார்த்தான். மாட்டின் கழுத்தில் கட்டும் மணி ஒன்று கிடந்தது. 'இதை வைத்துக்கொண்டு என்ன செய்வது?' என்று நினைத்தான். 'ஒன்றும் இல்லாததற்கு இதுபோதாதா?' என்று அதை எடுத்துச் சட்டைப் பைக்குள் போட்டான்.

அங்கே ஒரு கிழவர் வந்தார். கையில் ஒரு கோலை ஊன்றிக்கொண்டு வந்தார். 'எங்கள் பசுமாட்டின் மணி காணமற் போய்விட்டது. நீ அதைக் கண்டாயா?' என்று கேட்டார்.

'ஆம், நான் அதைக் கண்டெடுத்தேன். அது எனக்குத்தான் சொந்தம்,' என்றான்.

'நீ சொல்வது சரி அன்று. அது என்னுடைய மணி; அதை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்,' என்று பெரியவர் சொன்னார். 'நான் ஏன் கொடுக்கவேண்டும்? ,கண்ணாடிச் செருப்புகளைக் கண்டெடுத்தேன்; அவைகளைக் கொடுத்துவிட்டேன். குல்லாய் கிடைத்தது. அதுவும் போய்விட்டது. இச் சிறிய மணியையும் கொடுத்துவிடவேண்டுமா?' என்று கேட்டான்.

'ஆம், கொடுத்துவிடவேண்டியது தான். மற்றவர்களுடைய சொத்துக்களை நீ வைத்துக்கொள்வது சரி அன்று. இது கூட உனக்குத் தெரியாதா?' என்று கிழவர் கேட்டார்.

பாலன் மணியை எடுத்துக் கிழவரிடம் கொடுத்துவிட்டான். மணி கையை விட்டுப் போய்விட்டதே என்று பெருமூச்சுவிட்டான். 'மணியை எடுத்துக் கொண்டு ஓடியிருந்தால் கிழவர் என்ன செய்வார்? அவரால் என்னைப் பிடிக்க முடியாது', என்று எண்ணிக்கொண்டான். ஆனால் அப்படிச் செய்வது தவறு என்று அவனுக்குத் தெரியும்.

'அதைப் பற்றிப் பேசிப் பயன் என்ன? கிடைத்த மணி போய்விட்டது,' என்று சொல்லிக்கொண்டு வீட்டை நோக்கிப்புறப்பட்டான். கிழவர் எதிரில் வந்து நின்ருர். 'நீ செய்ததுதான் சரி; எனக்குக் கொடுத்த மணிக்குப் பதிலாக உனக்கு மூன்று வரங்கள் தருகிறேன். உனக்கு என்னவேண்டும்?' என்று கேட்டார்.

'எது கேட்டாலும் கிடைக்குமா?' என்று பாலன் கேட்டான்.

'நினைத்தது நடக்கும்; எதுவேண்டுமாளுலும் கேள்' என்ருர்.

'நான் அரசனுகவேண்டும்', என்று கேட்டான்.

'நீ அரசனுகக் கடவது; அடுத்த வரம் கேள்', என்ருர்.

பாலன் சற்றுத் தயங்கினுன். அரசனுகிவிட்டால் வேறு என்னவேண்டும் என்று எண்ணிப்பார்த்தான்.

'நான் அரசனுகிவிட்டால் குடி இருக்க இடம்வேண்டும். முன்போல் மாடுகளுடன் படுத்துறங்க முடியுமா?

ஒரு பெரிய அரண்மனைவேண்டும்,' என்று கேட்டான்.

'அதுவும் நல்ல வரம்தான். பெற்றுக்கொள்; மூன்ருவது வரத்தைக்கேள்" என்ருர்.

'நான் அரசனுகி அரண்மனையில் வசித்திருந்தால் ஏன் கால்கடுக்க நடக்க வேண்டும்? எனக்கு நல்ல குதிரை ஒன்று வேண்டும்,' என்று கேட்டான்.

கிழவர் 'இதோ பார்!' என்ருர். அழகிய குதிரை பாலன் அருகில் வந்து நின்றது. தங்கக்கவசம் அணிந்திருந்தது.

'இப்போது உன் அரண்மனைக்குப் போகலாம்', என்று கிழவர் வழி காட்டி

ஞர். மலையின் அடிவாரத்தில் அரண் மனையின் கோபுரங்கள் தெரிந்தன. பாலன் குதிரைமேல் ஏறிச் சென்றான். கோட்டை வாசலில் வீரர்கள் அணி வகுத்து நின்றனர். அவர்கள் பால னுக்கு மரியாதை செலுத்தினர்.

வாயிற் காப்பாளன் ஓடிவந்து குதி ரையைப் பிடித்துக் கொண்டான். பாலன் குதிரையைவிட்டு இறங்கி அரண்மனைக்குள் சென்றான். அரச சபையில் அனைவரும் எழுந்து நின்று பாலனுக்குத் தலைவணங்கினர். 'வாழ்க அரசர்! வாழ்க அரசர்!' என்று பாலனை வாழ்த்தினர்.

முன் ஒரு காலத்தில் ஒருகிழவி இருந்தாள். அவளிடம் ஏராளமான வாத்துக்கள் இருந்தன. ஒருநாள் வாத்து மேய்க்கும் சிறுமி சொல்லாமல் ஓடிவிட்டாள். கிழவிக்கு என்ன செய்வதென்று புரிய

கிழவி வாத்துக்களைக் கொண்டு போய்ச் சந்தையில் விற்பது வழக்கம். ஆள் இல்லாததால் சந்தைக்கும் போக முடியவில்லை. வீட்டில் சோறு சமைப்பதற்கு அரிசி இல்லை. வாத்துக்களை விற்றுத் தானே அரிசி வாங்கவேண்டும்?

எனவே கிழவி ஒரு கூலி ஆளைத் தேடிப் புறப்பட்டாள்.

வழியில் ஒரு கரடி வந்தது 'பாட்டி பாட்டி! எங்கே போகிறாய்?' என்று கரடி கேட்டது.

'வாத்து மேய்ப்பதற்கு ஓர் ஆள் வேண்டும்; அதற்காகத் தேடி அலைகிறேன்!' என்றாள்.

'வேண்டுமானால் நான் வருகிறேன். நன்றாய்ப் பார்த்துக் கொள்வேன். கூலி ஒன்றும் கொடுக்கவேண்டாம்', என்று கரடி சொல்லிற்று.

'அதுவும் நல்லதுதான். ஆனால் வாத்துக்கள் உன் உறுமலைக் கண்டு ஓடி விடும். என் குரலில் நீ பேசமுடியுமா? என்று கிழவி கேட்டாள்.

'ஏன் பேசமுடியாது? என்று சொல்லிக்கொண்டு கரடி 'உர் உர்' என்று உறுமிற்று.

கிழவி காதுகளைப் பொத்திக் கொண்டாள். 'உன் குரலைக் கேட்டால் ஒரு வாத்துக் கூட நிற்காது' என்று சொல்லிவிட்டு வேறு வழியில் சென்றாள்.

சற்றுநேரம் கழித்து ஓர் ஓநாய் வந்தது.

'பாட்டி பாட்டி! எந்த ஊருக்குப் போகிறாய்?', என்று கேட்டது. 'வாத்து மேய்க்க ஓர் ஆள்வேண்டும். அதற் காகத் தேடிச் செல்கிறேன்', என்றாள்.

'நான் மேய்க்கிறேன்; உன்னோடு வரலாமா?' என்று ஓநாய் கேட்டது.

'நீ நன்றாக ஓடுவாய்; ஆனால் உன் குரல் வாத்துக்குப் பிடிக்காதே!' என்று கிழவி சொன்னாள். 'நான் இனிமை யாகப் பேசுவேன்,' என்று ஓநாய் ஊளை இட்டது.

கிழவி நடுங்கிப்போனாள். 'இப்படிக் கத்தினால் வாத்துக்கள் எல்லாம் ஓடி விடும்!' என்று சொல்லிவிட்டு அதற்கு அப்பால் நெடுந்தூரம் சென்றாள்.

அங்கே ஒரு குள்ளநரி வந்தது.

'பாட்டி! வணக்கம். ஏன் வெயிலில் நடந்துபோகிறீர்கள்?' என்று கேட்டது.

'என் தலைவிதி. என்ன செய்வது? வாத்து மேய்க்க ஆள் கிடைக்கவில்லை.

இப்படி அலையவேண்டி இருக்கிறது, என்றாள். 'அவ்வளவுதானா? அதில் எனக்கு நல்ல பழக்கம் உண்டு. நான் உங்களுடன் வந்து என்னால் ஆன உதவி செய்கிறேன்', என்று நரி சொல்லிற்று.

கிழவி நெடுந்தூரம் நடந்து களைத்துப் போய்விட்டாள். தேடினது போதும் என்று ஆய்விட்டது அதனால், வாத்துக்களைக் கூப்பிட முடியுமா? என்றுகூடக் கேட்கவில்லை.

'அப்படியானால் என்னுடன் வந்து வேலையை ஒப்புக்கொள். சரியாய்ப் பார்த்துக் கொள்ளாவிட்டால் மூட்டை கட்டி அனுப்பிவிடுவேன்' என்று எச்சரிக்கை செய்தாள்.

நரி கிழவியுடன் அவள் வீட்டிற்குச் சென்றது. அன்று மேய்ச்சலுக்குப் போனபோது ஆறு வாத்துக்களைத் தின்றுவிட்டது. மறுநாள் ஆறு வாத்துக்களை விழுங்கிற்று. மூன்றாவது நாள் இன்னும் ஆறு வாத்துக்களைச் சாப்பிட்டது. ஒரு வாரத்தில் வாத்துக்கள் எல்லாம் நரிக்குப் பலி ஆகிவிட்டன.

ஏழாவதுநாள் இரவு நரிமட்டும் வீட்டிற்குத் திரும்பிவந்தது. 'வாத்துக்களை எங்கே விட்டுவந்தாய்?' என்று கிழவி கேட்டாள்.

'அவைகள் குளக்கரையில் இருக்கின்றன! அழைத்தால் அவைகள் என்னுடன் வருவதில்லை,' என்று சொல்லிற்று.

'அவைகளை எப்படி அழைப்பது? என்று இன்னும் நீ கற்றுக்கொள்ளவில்லை. நானே வந்து அழைக்கிறேன்,' என்று கிழவி சொன்னாள். கையிலிருந்த வெண்ணெய்ப் பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு வெளியில் சென்றாள்.

'கிழவி திரும்பிவரும் வரையில் இங்கே இருக்கக் கூடாது. ஆனால் போகும்போது வெண்ணெயை ஏன் விட்டுவிட்டுப் போகவேண்டும்?' என்று நரி நினைத்தது.

நரி வெண்ணெயைச் சாப்பிட ஆரம்பித்தது. வெண்ணெய் பாதிக்குமேல் அதன் வயிற்றுக்குள் போய்விட்டது. அதற்குள் கிழவி திரும்பிவந்துவிட்

டாள். குளக்கரையில் வாத்துக்களின் எலும்புகள் குவிந்துகிடந்தன. நரி செய்த மோசம் அவளுக்குத் தெரிந்து விட்டது.

கிழவி கடுங்கோபம் கொண்டாள். வெண்ணெய்ப் பாத்திரத்தை எடுத்து நரியின்மேல் எறிந்தாள்.

நரி ஒரே ஓட்டமாக ஓடிற்று. கொஞ்சம் வெண்ணெய் அதன் வாலில் ஒட்டிக்கொண்டது. அதன் வாலின் நுனி எப்போதும் வெண்மையாக இருந்தது. கழுவினாலும் போகவில்லை. அந்த நரியின் குட்டிகளும் பிறக்கும்போதே

வாலில் வெண்மை நிறத்துடன் பிறந்தன. நரியின் வாலில் வெண்மை நிறத்தை நீங்கள் பார்க்கும்பொழுதெல்லாம் அதன் முப்பாட்டன்தான் வெண்ணெய் திருடி அடிபட்டவன் என்று தெரிந்துகொள்ளலாம்.

ஓடும் தோசை



ஒரு வீட்டில் இருபத்தேழு குழந்தைகள் இருந்தன. குழந்தைகள் எல்லாம் குறும்பு செய்தன. அந்த வீட்டுக்கார அம்மாளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ஆளுக்கு ஓர் அடி கொடுத்துப் படுக்கவைத்தாள். எல்லாம் உறங்கிவிட்டன.

மறுநாள் காலையில் அம்மா ஒரு பெரிய தோசை சுட்டாள். குழந்தைகள் எல்லாம் ஓடிவந்தன.

‘அம்மா! எனக்கு ஒரு தோசை!’ என்று ஒரு குழந்தை கேட்டது.

‘அம்மா! எனக்குப் பசி எடுக்கிறது. முதல் தோசை எனக்கு,’ என்று இரண்டாவது குழந்தை கேட்டது.

'எனக்கு முதலில் வேண்டும்,' என்றது மூன்றுவது குழந்தை.

'என்னை மறந்து விடாதீர்கள். எனக்கும் பசிக்கிறது,' என்றது நான்காவது குழந்தை. எல்லாக் குழந்தைகளும் அம்மாவைச் சுற்றி ஓடி வந்தன. தோசை வேண்டுமென்று தொந்தரவு செய்தன. கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டன.

எல்லோருக்கும் தருகிறேன். தோசை இன்னும் வேகவில்லை. பொறுமையோடு இருந்தால்தான் கொடுப்பேன்,' என்று அம்மா சொன்னாள்.

தோசை ஒருபுறம் வெந்து தானுகவே மறுபுறம் திருப்பிக்கொண்டது.

'அம்மா அதைத் திருப்பிப்போடவில்லையே; அது எப்படி திரும்பிற்று?' என்று ஒரு குழந்தை கேட்டது.

'அதில் ஏதோ மந்திரசக்தி இருக்கிறது,' என்று அம்மா சொன்னாள்.

உடனே அந்தத் தோசை சட்டியிலிருந்து வெளியில் குதித்தது. தரையில் சக்கரம்போல் உருண்டுசென்றது. தெரு

வாசற்படியைக் கடந்து வீதிவழியே உருண்டு ஓடிற்று.

அதன் பின்னால் அந்த அம்மாள் ஓடினாள். அம்மாளுக்குப் பின்னால் குழந்தைகள் ஓடின. தோசை வேகமாக ஓடிவிட்டது. அவர்களால் அதைப் பிடிக்க முடியவில்லை. வருத்தத்துடன் வீட்டுக்குப்போய் விட்டனர்.

தோசை நெடுந்தூரம் சென்றது. எதிரில் ஒரு மனிதன் வந்தான்.

'வணக்கம் வணக்கம்,' என்று தோசை பேசிற்று.

'இதென்ன தோசை பேசுகிறது! அதில் கொஞ்சம் தின்று பார்க்கலாமா?' என்று அதன் அருகில் வந்தான்.

'நான் ஒரு அம்மாளிடம் இருந்து தப்பி ஓடிவந்தேன். இருபத்தேழு குழந்தைகள் என்னை விழுங்க வந்தார்கள். நான் தப்பிப் பிழைத்து ஓடிவந்தேன். என்னைத் தொடாதே!' என்று சொல்லி விட்டுத் தோசை ஓடிவிட்டது.

எதிரில் ஒரு பெட்டைக் கோழி வந்தது. தோசை நிற்காமல் ஓடிக் கொண்டு இருந்தது. கோழி துரத்திக் கொண்டு ஓடிற்று.

'ஓடாதே நில். நீ வட்டமாகவும் அழகாகவும் இருக்கிறாய், ஓர் ஓரத்தில் மட்டும் கொஞ்சம் தின்று பார்க்கலாம்,' என்று கோழி கூவிற்று.

'என்னை யாரும் சாப்பிடவேண் டாம். நான் சென்று வருகிறேன்' என்று சொல்லிவிட்டுத் தோசை ஓடி-விட்டது.

எதிரில் ஒரு சேவல் வந்தது.

'அருமையான தோசை! நெய்யில் சுட்டதோசை எனக்குக் கொஞ்சம் வேண்டும்,' என்று சேவல் கொக் கரித்தது.

இருபத்தேழு குழந்தைகளிடமிருந்து தப்பி ஓடிவந்தேன், ஒரு மனிதன் துரத்திப் பார்த்தான்; கோழியும் கெஞ்சிப் பார்த்தது. நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். உன்னாலும் என்னைப் பிடிக்க முடியாது,' என்று சொல்லித் தோசை ஓட்டம் பிடித்தது.

சற்றுநேரம் கழித்து ஒரு வாத்து வந்தது. தோசை நிற்கவில்லை.

'ஓடாதே! ஓடாதே! எனக்குக் கொஞ்சம் தோசை வேண்டும்,' என்று வாத்து கேட்டது.

'என்னை எவராலும் பிடிக்க முடியாது. மனிதனாலும் முடியாது? பறவையாலும் முடியாது. நீ எம்மாத்திரம்?' என்று சொல்லி உருண்டு ஓடிற்று.

எதிரில் ஒரு பன்றி வந்தது.

'எங்கே வேகமாகப் போகிறாய்' என்று பன்றி கேட்டது.

தோசை தன் கதையைச் சொல்லிற்று.

'மெதுவாகப் போகலாம். நான் உனக்குத் துணையாக வருகிறேன். அவர்

கள் வந்தால் உதை கொடுக்கிறேன்,' என்று பன்றி சொல்லிற்று.

தோசைக்குப் பன்றியிடம் நம்பிக்கை ஏற்பட்டது. பன்றியுடன் மெதுவாக நகர்ந்து சென்றது.

குறுக்கே ஒரு சிறிய ஆறு வந்தது.

'இதை எப்படிக் கடந்து செல்வது? தண்ணீரில் போனல் நான் தூள் தூளாய்ப் போய்விடுவேன்', என்று தோசை சொல்லிற்று.

'என் தலைமேல் ஏறிக்கொள். உன்னைப் பத்திரமாய்க் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்', என்று பன்றி கூறிற்று.

தோசை பன்றியின் தலைமேல் ஏறியது. பன்றி வாயைத் திறந்துகொண்டு தலையை அசைத்தது தோசை வழுக்கிக் கொண்டு வந்து பன்றியின் வாயில் விழுந்தது.

பன்றி 'அபக் அபக்' என்று அப்படியே தோசையை விழுங்கிவிட்டது.

காட்டில் கட்டிய வீடு



ஒரு குடியானவனிடம் ஓர் ஆடு இருந்தது. அது தோட்டத்தில் எங்கே வேண்டுமானாலும் போகும். அது நன்றாகக் கொழுத்துப்போய் இருந்தது.

ஒருநாள் அவன் அதைப் பிடித்துக் கட்டி வைத்தான். 'உனக்கு முடிவு காலம் வந்துவிட்டது. நாளைக்கு உன்னை விற்றுவிடப் போகிறேன். வாங்கிக் கொண்டுபோய் என்ன செய்வார்களோ எனக்குத் தெரியாது', என்றான்.

இது ஆட்டிற்கு மிக்க வருத்தத்தை யளித்தது. எனவே குடியானவன் இல்

லாத சமயம் பார்த்து ஆடு கயிற்றை அறுத்துக் கொண்டது. வீட்டைவிட்டு ஓட்டம் பிடித்தது. போகும் வழியில் ஒரு பன்றியைச் சந்தித்தது. பன்றிக்கு நிறையத் தீனி வைத்திருந்தார்கள்.

'உனக்கு நன்றாகத் தீனி கொடுக்கிறார்கள். ஏன் தெரியுமா!' என்று ஆடு கேட்டது.

'எனக்குத்தெரியாது',என்றுபன்றி கூறிற்று.

'உன்னைக் கொழுக்க வைத்துவிற்று விடுவார்கள். உயிருக்கே தீங்கு நேரிடும் போலிருக்கிறது. நானும் அதனால்தான் ஓடி வந்துவிட்டேன்', என்று ஆடுசொல்லிற்று.

'அப்படியானால் நானும் வருகிறேன். இங்கே இருந்தால் உயிர்போய் விடும்' என்று பன்றியும் புறப்பட்டது.

'காட்டிற்குப்போய் ஒரு வீடு கட்டலாம்' என்று ஆடு அழைத்துச் சென்றது. 'சுதந்திரமாக வாழலாம். எவருக்கும் அடிமையாக இருக்கக் கூடாது' என்று

இரண்டும் சேர்ந்து காட்டிற்குச் சென்றன.

காடுபோய்ச் சேர்வதற்குள் ஒரு வாத்து எதிரில் வந்தது.

'இருவரும் எங்கே போகிறீர்கள்'? என்று வாத்து கேட்டது.

'நாங்கள் காட்டில் வீடுகட்டப் போகிறோம்; எங்களுக்கு வீடுதலை கிடைத்திருக்கிறது', என்று ஆடு சொல்லிற்று.

'நானும் வருகிறேன்; வீடு கட்டுவதற்கு உதவி செய்கிறேன்', என்று வாத்து கூறிற்று.

பன்றி சிரித்துவிட்டது. 'நீ ஒரு சிறிய வாத்து! உன்னால் என்ன வேலை செய்ய முடியும்?' என்று கேட்டது.

'நான் கூரைபோடுவேன். காற்றுக்கும் மழைக்கும் தாங்கும்படி சுவர்களை அமைப்பேன்' என்று வாத்து பேசிற்று.

'மிகவும் நல்லது. எங்களுடன் நீயும் வந்து இருக்கலாம்' என்று ஆடு அழைத்துச் சென்றது.

சற்று நேரம் கழித்து ஒரு முயல் வந்தது. 'எல்லோரும் வேடிக்கை பார்க்கப் போகிறீர்களா?' என்று முயல் கேட்டது.

'நாங்கள் வீடு கட்டப்போகிறோம். சொந்த வீடு இருந்தால் நமக்கு நல்லது தானே?' என்று ஆடு சொல்லிற்று.

ஒவ்வொரு புதரிலும் நான் வீடு கட்டி இருக்கிறேன். ஆனால் என் வீடுகள் காற்றுக்கும் மழைக்கும் தாங்குவதில்லை.

'நல்ல வீடு கட்டுவதாக இருந்தால் நானும் வருகிறேன்!' என்று முயல் கூறிற்று.

'உனக்கு என்ன வேலை தெரியும்?' என்று பன்றி கேட்டது.

'மரவேலை எல்லாம் நன்றாகச் செய்வேன். என்னுடைய பற்களும் நகங்களும் கூர்மையாக இருக்கின்றன. வேறு ஆயுதமே வேண்டியதில்லை', என்று முயல் சொல்லிற்று.

'அது சரி; நீயும் வரலாம்', என்று ஆடு முயலை அழைத்துச் சென்றது.

நான்கும் ஒன்ருக நடந்து சென்றன. எதிரில் ஒரு சேவல் வந்தது.

'எங்கே போகிறீர்கள்?. ஒரே கொண்டாட்டமாக இருக்கிறதே!' என்று சேவல் கேட்டது.

'நாங்கள் ஓர் அழகிய வீடு கட்டப் போகிருேம். அடிமை வாழ்வை வெறுத்துவிட்டோம். சுயேச்சையாக வாழப்போகிருேம்', என்று ஆடு சொல்லிற்று.

'இது நல்ல ஏற்பாடு; நானும் வரட்டுமா?' என்று சேவல் கேட்டது.

'அதெல்லாம் எனக்குத் தெரியாது. யார்வேண்டுமாஞலும் வரலாம். ஆனல் எங்களுடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டும். உனக்கு என்ன வேலை தெரியும்?' என்று பன்றி கேட்டது.

'புது வீட்டிற்குக் கடிகாரம் வேண்டும். அதற்குப் பதிலாக நான் இருக்கிறேன். சூரியன் உதிப்பதற்கு முன்னல் உங்களை எழுப்பிவிடுகிறேன். உச்சிப் பொழுது வந்ததும் உங்களுக்குச் சொல்லுவேன். உறங்கப்போகும் நேரத்தை

யும் நீங்கள் என்னிடம் தெரிந்து கொள்ளலாம்,' என்று சேவல் கூறிற்று.

'சரிசரி; கடிகாரம் ஒன்றுவேண்டும் என்பதை நான் மறந்துவிட்டேன். நான் பாதிநாள் உறங்கிவிடுவேன். உறக்கம் ஒரு பெரிய திருடன், நீ வந்தால்என்னை எழுப்பிவிடுவாய்;வாபோகலாம்', என்று பன்றி சேவலை அழைத்துச் சென்றது.



காட்டில் ஒரு நல்ல இடமாகப் பார்த்து வீடு கட்டத்தொடங்கின. பன்றி மரங்களைக் கீழே சாய்த்தது. ஆடு சுவர்களை எழுப்பிற்று. முயல் கூரை வேய்ந்தது. வாத்து சந்து பொந்

துகளை அடைத்து அழகுபடுத்தியது. வீடு நன்ருக அமைந்திருந்தது.

சேவலுக்கு வீடுகட்டும் வேலைகிடையாது. விடியற் காலையில் 'கொக்கறக்கோ கொக்கறக்கோ' என்று கூப்பிடும். எல்லோரும் நேரத்தோடு எழுந்து வேலை செய்வார்கள். பகல்வேளைகளில் சேவல் கூரைமேல் ஏறி உட்கார்ந்து கொண்டு காவல் காக்கும்.

வீடுகட்டி முடிந்ததும் ஆடு ஒரு மூலையில் படுத்து இளைப்பாறிற்று.

அந்தக் காட்டில் இரண்டு ஓநாய்கள் வசித்திருந்தன. ஒருநாள் இரண்டு ஓநாய்களும் புதிய வீட்டின் வழியாக வந்தன.

'இந்த வீட்டை நான் இதற்குமுன் பார்த்ததில்லை. இதில் யார் குடி இருக்கிருர்கள்?' என்று ஓநாயின் மனைவி கேட்டது.

'நான் பார்த்துவிட்டு வருகிறேன்' என்று அதன் கணவன் முன்வாசலுக்குச் சென்றது. கதவைத் தட்டாமல் நேராக உள்ளே சென்றது.

ஆடு ஓநாயின்மேல் பாய்ந்தது. பன்றி அதை நன்ருகக் கடித்தது. வாத்து ஓநாயைக் கொத்தி அதன் உடம்பைப் புண்ணுக்கியது. சேவல் கூவிக் கொண்டே இருந்தது. முயல் ஓநாயின் தலைமேல் ஏறிக் குதித்தது. ஓநாய் நடு நடுங்கி ஓட்டம் பிடித்தது.

"அந்த வீட்டுப் பக்கமே போகக் கூடாது; அதில் பிசாசு இருக்கிறது. அது உதைக்கிறது, கடிக்கிறது, கொத்துகிறது, கூரைமேல் ஒரு பிசாசு உட்கார்ந்திருந்தது; அது 'குத்துகுத்து கோகோ' என்று கத்திக்கொண்டே இருந்தது. நான் இன்னும் உயிரோடு இருக்கிறேனு?' என்று மனைவியிடம் கேட்டது.

ஓநாய் தான் பட்டபாட்டை எல்லா விலங்குகளிடமும் சொல்லிற்று. புது வீட்டின் பக்கத்தில் காட்டுவிலங்குகள் ஒன்றும் தலைகாட்டுவதில்லை.

ஆடும், பன்றியும், வாத்தும், முயலும், சேவலும் புதிய வீட்டில் இன்பமாகக் காலம் கழித்தன.